"DAILY THANTHI"

PAGE NO : 08

DATE : 05.09.21

# சமுதாய கல்லூரியில் பட்டய படிப்புகள் அறிமுகம்

## இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, செப்.5-

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பட்டய படிப்புகளில் சேர இணைய தளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியின் முதல்வர் சந்திரசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

### பட்டய படிப்புகள்

லாஸ்பேட்டையில் அமைந்துள்ள புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் நேரடி பார்வையில் செயல்பட்டு வரும் புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் வேலைவாய்ப்புகள் சார்ந்த பல்வேறு தொழிற்கல்வி படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

இந்த கல்லூரியில் 2021-22-ம் கல்வி ஆண்டு முதல் கர்நாடக இசை (பாட்டு), பரத நாட்டியக்கலை போன்றவற்றில் 6 மாதம் மற்றும் ஒரு வருட காலச்சான்றிதழ் படிப்பும், நாடகம் மற்றும் அரங்கக்கலைகளில் ஒரு வருட கால முதுகலை பட்டய படிப்பும் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது.

சான்றிதழ் படிப்புகளில் சேருவதற்கு 12-ம் வகுப்பில் தேர்ச்சியும், முதுகலை பட்டயபடிப்பில் சேருவதற்கு ஏதாவது ஒரு இளங்கலை பட்டயபடிப்பில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

### இணையதளம் மூலம்...

மேற்கண்ட படிப்புகள் அனைத்தும் மிகச்சிறந்த இசை, நாட்டியம், நாடகம் மற்றும் நடிப்புக்கலை வல்லுனர்களை கொண்டு பயிற்றுவிக்கப்படுகின்றது. கர்நாடக இசை, பரத நாட்டியம், நாடகம் மற்றும் அரங்கக்கலை தொடர்பான புதிய சான்றிதழ் மற்றும் பட்டயபடிப்புகளில் சேர்வதற்காக இணையதளம் வழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்த படிப்புகளில் சேர்ந்து கலைக்கல்வி பயில விரும்பும் http://pucc.edu.in என்ற இணையதளம் வழியாக விண்ணப்பித்து பயன்பெறலாம்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINAMALAR

5 SEP 2021

PAGE 2

# பல்கலைக்கழக நுழைவுத்தேர்வு 36,200 மாணவர்கள் பங்கேற்பு



புதுச்சேரி பல்கலைக்கழக உயிர் தகவலியல் துறையில் நடந்த நுழைவு தேர்வினை ஆன்–லைன் மூலம் எழுதிய மாணவ மாணவியர்.

**புதுச்சேரி, செப். 5–**

புதுச்சேரி பல்கலைக்கழக நுழைவுத் தேர்வினை, நாடு முழுவதும் 36,200 மாணவ, மாணவிகள் எழுதினர்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ., எம்.டெக்., பிஎச்.டி., படிப்புகளும், பல்வேறு பிரிவுகளில் டிப்ளமோ படிப்புகளும் நடத்தப்படுகிறது.

இப்படிப்புகளில், 2021–22 கல்வியாண்டில் சேர்வதற்கான நுழைவு தேர்வு, கடந்த 2ம் தேதி, இந்தியா முழுவதும் 40 நகரங்களில் துவங்கியது.

மொத்தம் 70 தேர்வு மையங்களில், ஆன்–லைன் மூலம் தேர்வு நடந்தது. நேற்று வரை தொடர்ந்து மூன்று நாட்கள் நடந்த நுழைவுத்தேர்வில் 36,200 மாணவ, மாணவியர் பங்கேற்றனர். தேர்வு அறைகளில் கொரோனா தடுப்பு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டது.